P. R. NO: 11. நாள்: 05.07.2017

# பத்திரிக்கை செய்தி

## மானியத்துடன் தொழில் தொடங்க சிறப்பு முகாம்கள்

புதிதாக சேவை மற்றும் உற்பத்தி தொழில்கள் ஆரம்பிக்க விரும்பும் படித்த மற்றும் படிக்காத தொழில் முனைவோர்கள் மானியத்துடன் கூடிய வங்கிக் கடன் பெற ஏதுவாக படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பாரத பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP), புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டம் (NEEDS) ஆகிய அரசுத் திட்டங்களை மாவட்ட தொழில் மையம் செயல்படுத்தி வருகிறது.

வயது மற்றும் வருமான வரம்பின்றி அவரவருக்கு தகுதியான திட்டங்களில் பயன் பெற இயலும்.

மேலும், மேற்கண்ட திட்டங்கள் அன்றி, நேரடியாக வங்கிக் கடன் பெற்றோ அல்லது சொந்த முதலீட்டில் உற்பத்தி தொழில் துவங்கினாலோ அல்லது விரிவாக்கம் செய்தாலோ தொழில் முனைவோர் பயன் பெறக்கூடிய மானியத் திட்டங்களையும் மாவட்ட தொழில் மையம் செயல்படுத்தி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில், உற்பத்தி மற்றும் சேவைத் தொழில்கள் புதிதாக துவங்குவதற்கு உத்தேசிக்கும் தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் விதமாக தென்காசி யூனியன் அலுவலகத்தில் 12.07.2017 அன்றும், மற்றும் அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் 18.07.2017 அன்றும் தொழில் ஊக்குவிப்பு முகாம்களில் காலை 10.00 மணி முதல் நடைபெற உள்ளது. தொழில் முனைவோர்கள் இம்முகாமில் நேரடியாக கலந்து கொண்டு அவரவருக்கு தகுதியான திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற விண்ணப்பிக்கலாம். மேலும் கடன் உதவி பெறவும், மானியம் பெறவும் தேவையான அனைத்து ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் இம்முகாம்களில் வழங்கப்படும். முகாம்களில் கலந்து கொள்வோர் கீழ்க்கண்ட ஆவணங்களுடன் கலந்து

கொண்டால் அந்தந்த முகாம்களில் UYEGP திட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கலாம் எனவும் மற்ற திட்டங்களில் விண்ணப்பிக்கவும் வழிகாட்டப்படும் இந்த வாய்ப்பை பயன்படுத்தி தொழில் துவங்க முன்வருமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

1. பள்ளி கல்லூரி மாற்றுச் சான்றிதழ் - 2 நகல்கள்
2. குடும்ப அட்டை - 2 நகல்கள்
3. குடும்ப அட்டை இல்லாதவர்கள் தாசில்தாரிடம் பெறப்பட்ட இருப்பிட சான்றிதழ் - 2 நகல்கள்
4. திட்ட அறிக்கை (புராஜெக்ட் ரிப்போர்ட்) - அசல் மற்றும் நகல்
5. விலைப்பட்டியல் (கொட்டேசன்) - அசல் மற்றும் நகல்
6. சாதிச் சான்றிதழ் - நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

பொது மேலாளர்,
மாவட்ட தொழில் மையம்,
திருநெல்வேலி.

வெளியீடு.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.